கழகத் தலைவர் அவர்களுடன் – மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக் கட்சிகளின் தலைவர்கள் சந்திப்பு!

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களை, நேற்று முன்தினம் (5.5.2026), காலை, சென்னை – அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக் கட்சிகளான ம.தி.மு.க. – வி.சி.க. சி.பி.எம். சி.பி.ஐ. ஆகிய கட்சிகளின் தலைவர்கள் தே.மு.தி.க. கட்சிப் பொருளாளர், வெற்றி பெற்ற கூட்டணிக் கட்சிகளின் சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் 'ஆம்ஆத்மி' கட்சியின் மாநில நிர்வாகிகள் சந்தித்தனர்.

திருச்சியில் சட்டமன்ற தொகுதியில் வெற்றி பெற்ற தங்கம் தென்னரசு வெற்றிச் சான்றிதழை தேர்தல் நடத்தும் அதிகாரியிடம் பெற்றுக் கொண்டார். உடன் மாவட்டக் கழகச் செயலாளர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன், ஒன்றிய செயலாளர் கண்ணன், காரியாபட்டி நகரச் செயலாளர் ஆர்.கே. செந்தில், விளையாட்டு மேம்பாட்டு அணி கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ஆர். ரமேஷ் ஆகியோர் உள்ளனர்.

அருப்புக்கோட்டை சட்டமன்ற தொகுதியில் வெற்றி பெற்ற தி.மு.க. வேட்பாளர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன் வெற்றி சான்றிதழை தேர்தல் நடத்தும் அதிகாரியிடம் பெற்றுக் கொண்டார். உடன் மாவட்டச் செயலாளர் தங்கம் தென்னரசு, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் விஜயகுமார், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் சுபராஜ், சாகுல் ஹமீது, முன்னாள் நகர் மன்ற தலைவர் சிவபிரகாசம், நகரச் செயலாளர் ஏ.கே. மணி, இளைஞர் அணி பாபுஜி ஆகியோர் உள்ளனர்.

சாத்தூர் சட்டமன்ற தொகுதியில் திமுக வேட்பாளர் கடற்கரைராஜ் வெற்றிச் சான்றிதழை தேர்தல் நடத்தும் அதிகாரியிடம் பெற்றுக் கொண்டார். உடன் முன்னாள் அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.இராமச்சந்திரன், தங்கம் தென்னரசு முன்னாள் சேர்மன் சுப்பாராஜ், சாத்தூர் நகரச் செயலாளர் குருசாமி, ஒன்றியச் செயலாளர் முருகேசன் ஆகியோர் உள்ளனர்.

சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூர் தாலுகா அரளிக்கோட்டையில் சிவகங்கை மாவட்ட கழக செயலாளர் முன்னாள் அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன் தனது தந்தை பி.எல்.கருத்தான் நினைவு தினத்தை முன்னிட்டு அவரது திருவுருவப் படத்திற்கு மலர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். உடன் திருமதி பிரேமா பெரிய கருப்பன் மற்றும் நிர்வாகிகள் உள்ளனர்.